**கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்பாட்டு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,989,274 தொகை முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பிடப்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களின் அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளினூடாக இதனை திருத்துவதாக அறிவிக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களுக்கமைய கணக்கு வைக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் நடைமுறை வேலைகளுக்கான காசுப்பாய்ச்சல் ரூபா 99,919,432 தொகையாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், செலவின உறுதிச்சீட்டுக்களை பரிசோதிக்கும் போது அதன் பெறுமதி ரூபா 100,564,540 ஆனமையால் அதில் ரூபா 645,108 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | உறுதிச்சீட்டுக்களை பரிசோதிக்கும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு செலுத்திய 12 மாதங்களுக்கான சம்பளமும் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அந்த பெறுமதி தவிர ஏனைய வேறுபாடுகள் தொடர்பில் தேடியறிந்து எதிர்காலத்தில் வேறுபாட்டுக் கணக்கினூடாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஆண்டிற்குரிய பணிக்கொடைகள் ரூபா 237,526 இனால் குறைத்து நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அந்த தொகையில் உள்ளடங்குவது ஒரு உத்தியோகத்தரின் பணிக்கொடைக்கான குறை நிதியேற்பாடாகும். இந்த பற்றாக்குறையான நிதியேற்பாடு எதிர்வரும் வருடத்தில் மேலும் திருத்தப்படும். | நிதியேற்பாடுகள் சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |
| (இ) நிலையான சொத்துக்களனின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பயன்படு ஆயட்கால் 10 வருடங்களுக்கு மேற்பட்ட பொறிகள், இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரண விடயங்கள் 38 இன் பயன்படு ஆயட்காலம் 5 மற்றும் 6 வருடங்களாக கருதி பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு செலவினமானது ரூபா 87,374 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உங்களின் அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளினூடாக இதனை திருத்துவதாக அறிவிக்கின்றேன | பயன்படு ஆயட்காலத்தினை அடிப்படையாக கொண்டு சரியான பெறுமானத்தேய்வு வீதத்தின் அடிப்படையில் கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாயிகளுக்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினூடாக 16 மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,024,000 பெறுமதியான கடன் தொகையில் ரூபா 1,582,935 தொகையான மீதியும், கிராமிய முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்று மாணவர்களுக்கு 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 312,000 பெறுமதியான கடன் தொகையில் ரூபா 58,100 தொகை மற்றும் "Planting Material" எனும் கடன் உத்தேச முறைமையின் கீழ் 06 மாணவர்களிடமிருந்து ரூபா 420,810 தொகையான கடன் மீதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட உருவாக்க குழுவின் அங்கீகாரம் பெற்ற பின்னர் கடன் தவணை செலுத்துதல் புறக்கணித்துள்ள மாணவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய கடன்களை செயற்திறனாக அறவிட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | உரிய பணி நிறைவடைந்தவுடன், உடனடியாக முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 08 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 477,500 பெறுமதியான முற்பணங்களை தீர்ப்பதற்கு 65 முதல் 180 நாட்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | முற்பணங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய ஆறு பேர் மாத்திரம் உள்ளதுடன், தீர்க்கும் போது அது புறக்கணிக்கப்பட்டு இது தாமதமடைந்துள்ளதுடன், எதிர்காலத்தில் இவ்வாறானவை இடம்பெறாதிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒவ்வொரு நிதியாண்டினதும் சனவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் பௌதீக இருப்பு மெய்மையாய்வு பணிகள் நிறைவு செய்யப்பட்டு மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த வருட்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கான பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | இந்த பணியை மிகவும் ஒழுங்குமுறையாக நிறைவேற்றுவதற்காக வெளிவாரி தரப்பினராக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் கணக்கு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அந்த தரப்பின் அதிக வேலைப்பளுவின் மத்தியில் இம்முறை பௌதீக பொருள் மெய்மையாய்வு சிறிதளவு தாமதமடைந்துள்ளது. | உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 4,019,352 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 1,201,287 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 5,220,639 ஆன வீழ்ச்சியொன்றாகும். இந்த வீழ்ச்சிக்கு இழைய நடுகைக் கன்றுகளின் விற்பனை வருமானம் குறைவடைந்தமை மற்றும் ஆளனி வேதன செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமான விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விடயம் | 2018 | 2017 | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வருமானம் | 15,219,211 | 19,550,958 | (4,331,747) | (22) |
| வட்டி வருமானம் | 1,502,520 | 3,968,763 | (2,466,243) | (62) |
| ஈட்டிய வருமானம் (ஏனைய) | 17,623,404 | 5,565,396 | 12,058,008 | 217 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வாழைக் கன்றுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை குறைவடைந்தமையால் வருமானம் 22 சதவீத்ததாலும், 2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 78 மில்லியனான முதலீடுகள் விடுவிக்கப்பட்டமையின் காரணத்தால், மீளாய்வாண்டின் வட்டி வருமானம் 62 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 178 ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டின் போது மாணவர்களின் எண்ணிக்கை 277 வரை அதிகரித்தமையின் காரணத்தால் ஈட்டிய வருமானம் 217 சதவீத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப பீடமாக அறிமுகப்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், புதிய முன்மொழிவுகளுக்கமைய கற்கைப் பிரிவுகள் 04 இனை தாபித்து | இது வரையிலும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தரக்கட்டுப்பாட்டு பிரிவு (Quality Assurance Council) இன் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் | அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் மூலம் பட்டப் பாடநெறிகள் 02 இனை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | Standing Committee இன் போது கலந்துரையாடப்பட்டவாறு உள்ளது. | |
| (ஆ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான சுமார் 50 ஏக்கர்கள் அளவான காணியினுள் நிறுவனத்தை தாபித்து அதில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் உரித்து சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 50 ஏக்கர்கள் காணியின் சட்டரீதியான உரித்தினை பெற்றுக்கொள்வதற்காக தற்போது நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பணிகளையும் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளது.<br><br>அவ்வாறே இந்த 50 ஏக்கர்கள் அளவான காணிக்காக தற்போது ரூபா 1,080,000.00 ஆன குத்தகை தொகையும் லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே, 2017 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் காணிகள் ஆணையாளர் திணைக்களத்தில் 50 ஏக்கர்களுக்குரிய சட்டரீதியான ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்ட போதிலும், இது வரையிலும் அந்த ஆவணங்கள் எமக்கு கிடைத்திருக்கவில்லை. | காணியை சட்டரீதியாக சுவீகரிக்கும் பணிகள் துரிதமான நிறைவு செய்யப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்திற்கு சொந்தமான 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 643,498 பெறுமதியான வாசிகசாலை புத்தகங்கள் 145 காணப்பட்டதுடன், நிறுவகத்தில் வாசிகசாலையொன்று இல்லாதிருந்தமையால் மீயர்வாண்டின் இறுதி வரையிலும் இந்த புத்தகங்களை மாணவர்களுக்கு பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இல்லாதிருந்தது. | இந்த புத்தகங்கள் இது வரையிலும் பேராசிரியர்களுடாக மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படுவதுடன், முடியுமான அளவு விரைவக இதற்கான இடமொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | புத்தகங்களின் பாவனைக்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று துரிதமாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் கூட்டுப் பொறுமதி ரூபா 47,870,000 தொகையான 21 கொள்வனவுகள் மீளாய்வாணடினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 வழிகாட்டிக்கமைய பெறுகைகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள அமைப்புக்குறிப்பீடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் பொறுப்பான போதிலும், தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 1,816,348 பெறுமதியான 06 பெறுகைகள் தொடர்பில் அவ்வாறு பெறுகைகள் மதிப்பாய்வு குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>(இ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3(ஆ) வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வி கோரல் நிறைவடைவதுடன் கூடியளவு விரயவாக பெறுகைகள் திறக்கப்பட வேண்டிய போதிலும், உரிய திகதியை விஞ்சி 02 முதல் 38 நாட்கள் தாமதித்து விலைக்கேள்வி திறக்கப்பட்ட 06 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அரசினால் வழங்கப்படும் நிதியேற்பாடுகள் உரிய நேரத்தில் கிடைக்காமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மொத்த தொகையும் கிடைக்காமை போன்ற வியங்களின் அடிப்படையில் நிதி ரீதியான இடர்பாடுகளின் மத்தியில் அவ்வாறான நிலைமைகளினுள் பெரும்பாலான பெறுகைகள் தாமதமாவதுடன், 2018 ஆம் ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 3.05 மில்லியன் இது வரையிலும் விடுவிக்கப்படவில்லை. அவ்வாறே, நிறுவனத்தினுள் அனைத்துப் பிரிவுகளின்தும் உரிய முறையில் பணிகளை மேற்கொள்வதற்கு பொதுவான வரையறுக்கப்பட்ட ஊழியர்களின் பிரிவொன்று உள்ளமையால் அனைத்து பணிகளையும் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ளல் கடினமானதென அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுரைகளுக்கமைய மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 36 பேராக காணப்பட்ட போதிலும், உள்ளபடியான பதவியணியில் 11 உத்தியோகத்தர்கள் | நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 24 பதவிகள் கல்விசாரா பதவிகள் என்பதால் 876 சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த பதவிகளுக்காக உயர் கல்வி அமைச்சின் பட்டியலொன்றில் தீர்மானிக்கப்பட்ட | வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்பட்டமையால் ஒட்டுமொத்த பதவியணியிலான பற்றாக்குறை 25 பேராகும். அதனுள் கல்விசார் பதவியணியின் 05 பேராசிரியர்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | நடைமுறைக்கமைய இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் கல்விசார பதவிகளின் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>கல்விசார் பதவியணியின் 05 பேராசிரியர்களின் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையை பின்பற்றி பேராசிரியர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், எஞ்சியோரை இணைத்துக்கொள்வதற்கு பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டின் முதற் காலப்பகுதியில் அதற்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை என அறிவித்தமையால் மீண்டும் பதவி வெற்றிட விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. | |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் குறிகாட்டிகளுக்கமைய நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பணிகள் மற்றும் செயன்முன்னேற்றத்தினை பரிசோதிக்கும் போது 11 பணிகளின் எவ்வித முன்னேற்றமும் இல்லாதிருந்ததுடன், 06 பணிகளின் செயன்முன்னேற்றம் 2 சதவீதம் முதல் 33 வரையான குறைவான மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில பணிகள் செயன்முன்னேற்றமில்லாது நிறைவடைந்துள்ளது மூலதன நிதியங்கள் போதியளவில் நிறுவகத்திற்கு அங்கீகரிக்கப்படாமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மொத்த தொகையும் கிடைக்காமையால் ஆகும். இதற்கடுத்த நிதியாண்டினுள் இந்த பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு உரிய செயல்நடவடிக்கை திட்டங்கள் தயாரிக்கப்படும். | செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் நோக்கலி காலப்பகுதியினுள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பாதீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களை ஒப்பீடு செய்யும் போது உள்ளக ரீதியாக ஈட்டப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தினை விட 45 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், 05 செலவின விடயங்களின் பாதிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினங்களை ஒப்பீடு செய்யும் போது விலகலானது 23 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மீளாய்வாண்டின் பாதீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களை ஒப்பீடு செய்யும் போது மிகை மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததாக காணப்படும் அவதானிப்புகளுடன் இணங்கக்கூடியதுடன், அவ்வாறானமைக்கான காரணமானது நிறுவனத்தினுள் நிகழும் துரித அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்திறனாக காணப்படுவதாகும். அவ்வாறான பணிகளை நிறைவேற்றும் போது மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களை அதற்காக மேற்கொள்ள நேர்வதுடன், பாதிடப்பட்ட நிதியேற்பாடுகளின் அடிப்படையிலேயே செயற்படல் நடைமுறைச்சாத்தியமற்ற பணியாகும். அவ்வாறே இழைய நடுகைப் பிரிவின் எதிர்பார்க்காதவாறு ஏற்பட்ட பின்னடைவு வருமான எதிர்வுகூறலின் மாற்றத்திற்கான காரணமாக அமைந்ததுடன், இதற்கடுத்த வருடத்தின் பாதீட்டினை தயாரிக்கும் போது இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீட்டினை நடைமுறைச்சாத்தியமாக தயாரித்து ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும். |